

# தலைசிறந்த பகுத்தறிவாளர் கலைஞர்!

கலைஞர் அவர்கள் நமக்குக் கிடைத்திருக்கிற அரிய பொக்கிஷம், மற்ற மாநிலங்களைவிட நமது தமிழகத்தின் பெருமை போற்றப்படுவதற்குக் காரணம் நமது கலைஞரின் தனித்திறமையாகும்.

கலைஞர் அவர்கள் நமக்கு கிடைத்ததற்கரிய வாய்ப்பு என்று சொல்ல வேண்டும். இதற்கு முன் ஆட்சியில் இருந்தவர்களைவிடப் பகுத்தறிவாளராவார், மனிதர்களை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம் – அதாவது நம்பிக்கையாளர்கள், பகுத்தறிவாளர்கள் என்பதாகும்.

நமது முதல்வர் கலைஞர் அவர்கள் தலைசிறந்த பகுத்தறிவுவாதி ஆவார். இந்தியாவை எடுத்துக் கொண்டால் இந்த ஒரு மாநிலத்தைத் தவிர மற்ற மாநிலங்களில் நடைபெறுகிற ஆட்சி யாவும். நம்பிக்கையாளர் ஆட்சியாகும். நம் நாட்டில் மட்டும்தான் நம்பிக்கையான பகுத்தறிவாளர் ஆட்சி நடக்கிறது.

தி.மு.க. ஆட்சியின் கொள்கை நமது மக்களுக்கு நன்மை செய்வதேயாகும். இந்தியாவில் இந்த மாநிலம் தான் அமைதியோடு இருக்கிறது. இது தி.மு.கழகத்திற்குப் பெருவெற்றி என்றால் அது கலைஞர் அவர்கள் தனது சாதுர்யத் திறமையால் பெற்றதாகும்.

இத்தகைய பகுத்தறிவாளராகவும் ஆட்சிக் கலையில் அரிய ராஜதந்திரியாகவும். முன்யோசனையுடனும் அவர் நடந்து வருவதன் மூலம் தமிழர்கட்குப் புதுவாழ்வு தருபவர் ஆகிறார் நமது கலைஞர்!

**–தந்தை பெரியார்**

# “தன்னை வெல்வான் - தரணியை வெல்வான்!”



காலை மணி பத்து இருக்கும். நான் அங்குச் சென்றபோது உடன் வந்திருந்த நெல்லை நகராட்சி மன்றத் தலைவர் மஜித், வழக்கறிஞர் இரத்தினவேலு பாண்டியன் மற்றும் பலரையும் தனியே இருக்கச் செய்துவிட்டு என்னை மட்டும், சிறை அதிகாரிகள் மூவர். கருணாநிதி இருக்கும் சிறைக்கூடம் அழைத்துச் சென்றனர். சந்தித்துப் பேசுவதற்கான ஒரு அறை தயாரிக்கப்பட்டிருந்தது. இரு அதிகாரிகள் உடன் இருந்தனர். கருணாநிதி அழைத்து வரப்பட்டபோது. முன்பு பலமுறை ஒருவரை ஒருவர் சிறையினில் சந்தித்ததுண்டு என்றபோதிலும், இம்முறை தனியானதோர் தவிப்புணர்ச்சி எழுந்து வாட்டியது. அதனை அடக்கிக்கொள்வது கடினம் என்றபோதிலும், கலக்கம் காட்டுவது நமது உள்ளத்தின் உறுதிபற்றி மற்றவர்களுக்கு அய்யப்பாடு ஏற்படுத்திவிடுமே என்ற அச்சம் வாட்டியது: தவிப்புணர்ச்சியைத் தள்ளிவைத்துவிட்டு, அரைமணி நேரத்திற்குமேல் பேசிக் கொண்டிருந்தோம். முன்னாள் நள்ளிரவிலேயே நான் நெல்லை போய்ச் சேர்ந்து விட்டேன். விடிந்ததும் என் காதில் விழுந்த முதல் செய்தி மாறனைப் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்து விட்டிருக்கிறார்கள் என்பது. நெல்லைக்குக் கிளம்புவதற்கு முன்பு காஞ்சிபுரத்திலிருந்து தொலைபேசி மூலம் மாறனிடம் பேசினேன், கைது செய்யப்படக் கூடும் என்ற அறிகுறிகள் தென்பட்டிருந்தால்கூட என்னிடம் சொல்லி இருந்திருப்பார். ஆகவே நெல்லையில் நான் கேள்விப்பட்ட செய்தி என்னைத் தூக்கி வாரிப்போட்டது.

கொடுமைகள் இழைக்கப்படும்போது. அநீதி தலைவிரித்தாடும்போது, அக்கிரமம் தம் அகன்ற வாயினைத் திறந்து அகோரக் கூச்சலிடும்போதெல்லாம் இறுதியில் நன்மைக்கே என்ற தத்துவத்தைத் துணைக்கழைத்துச் சமாதானம் தேடிக்கொள்ள முடியவில்லை. காரணம், நாம் ஒரு அரசியல் கட்சியின் உறுப்பினர்கள் என்ற முறையிலே மட்டும் இருந்து வருபவர்கள் அல்லர், பாசத்தால் பிணைக்கப்பட்ட ஒரு குடும்பமாகி விட்டிருக்கிறோம். அதனால் நம்மில் சிலருக்கு இழைக்கப்படும் கொடுமை. நம் எல்லோருடைய உள்ளத்தையும் வேதனையில் ஆழ்த்திவிடுகிறது.

அடக்குமுறையை வீசி அறப்போர் வீரர்களை அடக்கிவிடவோ, அவர்தம் பாசறையை ஒழித்துவிடவோ முடியாது. இது மிக எளிதாக எவருக்கும் புரிந்திடும் உண்மை என்றாலும், அரசாள்வோர் அதிலும் தமது பிடி தளர்ந்து வருவதை உணர்ந்து பீதி கொண்டுள்ள நிலையிலுள்ள அரசாள்வோர், உண்மையினை மறந்து விடுகின்றனர்.

சிறைக்கோட்டம் தள்ளப்படும் இலட்சியவாதிகளோ, உறுதி பன்மடங்கு கொண்டவர்களாவது மட்டுமல்ல: தன்னைப் பற்றிய எண்ணம், தனது நலனைப் பற்றிய நினைப்பு, தனது குடும்பம் பற்றிய எண்ணம், இவைகளைக்கூட மறந்துவிடவும், தான் தனக்காக அல்ல, மற்றவர்களுக்காகவே என்ற நெறியினை உணர்ந்து மகிழ்ந்திடவும், தன்னைப் பற்றிய எண்ணம் எழுப்பிவிடும் ஆசை, அச்சம், கவலை, கலக்கம், பிரிவாற்றாமை போன்ற உணர்ச்சிகளை வென்றிடவுமான ஒரு துறவு நிலையைப் பெற்றளிக்கிறது. இது பற்றியே ஆன்றோர். சிறைச் சாலையை அறச்சாலை என்றனர்.

பாளையங்கோட்டைச் சிறைவாயிலில் கண்டேன் இந்தப் பேருண்மையை உணர்த்தும் எழுத்தாரத்தை, அங்கு பொறிக்கப்பட்டிருப்பது என்ன?

“தன்னை வெல்வான்! தரணியை வெல்வான்!”

**–பேரறிஞர் அண்ணா**



# தமிழ்த் தாயின் தலைமகன்!

கலைஞர் அவர்களை வானாக - மலையாக - மேகமாக - நீராக - பல்வேறு வகையாகப் புனைந்து நம்முடைய கவிஞர் எல்லாம், அவரவரும் தத்தம் கற்பனை வளத்தையெல்லாம் சேர்த்துச் சிறப்பித்துப் பாடினாலும்கூட அவர் வானாகவும் எனக்குத் தோன்றவில்லை - மலையாகவும் எனக்குத் தோன்றவில்லை - கடலாகவும் தோன்றவில்லை; ஆனால் தமிழ்த்தாயின் தலைமகனாக தோன்றுகிறார்.

வான் போன்ற பரந்த புகழுக்குச் சொந்தக்காரர் ஆனாலும் மலை போன்று நிலைகுலையாத மன உறுதி வாய்ந்தவராக இருந்தாலும் நீர் போன்று தமிழ் மக்களிடத்திலே அன்பைப் பொழிகின்ற இயல்பைப் பெற்றாலும் மேகம் போன்று வானிலே சுற்றி வந்தாலும் கடல்போன்று அறிவிற்கு அவர் உரிமை உடையவராக இருந்தாலும் அதற்காகப் பாராட்டப்படுவார். எனினும், அத்தனைக்கும் மொத்தமாகச் சொந்தக்காரராக உள்ள கலைஞர் கருணாநிதியே, தமிழினக் காவலராக உள்ளார் என்பதை உணர்ந்தே நான் பெருமைப்படுகிறேன்.

தமிழ்ச் சமுதாயம் அமைதி காண வேண்டும் என்று ஆசைப்பட்டாலும் அதற்காகப் போராடித் தீர வேண்டியநிலை இருப்பதால் என்றைக்கும் ஒரு போர் வீரராக, தமிழ் மறவராக வாழ வேண்டும்.

கலைஞர் அவர்கள் ஆற்றியிருக்கின்ற தொண்டினையும் அவர் ஏற்றுக்கொண்டிருக்கின்ற தியாகத்தையும் அவர் உருவாகியிருக்கின்ற வரலாற்றையும், அவர் மூலமாக ஏற்பட்டிருக்கின்ற உணர்வை யும் காப்பாற்றித் தீரவேண்டிய கடமை நமக்கெல்லாம் இருக்கின்றது. வருங்காலத்தில் வாழ்ந்திட வேண்டிய இளைய தலைமுறைக்கெல்லாம் இருக்கின்றது என்ற உண்மை உள்ளங்கொள்ள வேண்டும்.

ஒரு தனி மனிதனுடைய ஆற்றலை நாம் விரும்புகிற காரணத்தால்தான் புகழ்கிறோம் என்பது உண்மையே தவிர அந்த ஆற்றல் மட்டுமே ஒரு சமுதாயத்தை வாழ வைப்பதற்குப் போதுமானதன்று என்ற காரணத்தாலே ஓர்இயக்கம் தேவைப்படுகிறது.

தந்தை பெரியார் அவர்களுக்கும், பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும் ஓர் இயக்கம் தேவைப்பட்டது. எந்த ஒரு சமுதாய சீர்த்திருத்தவாதியாக இருந்தாலும், அரசியல்வாதியாக இருந்தாலும் ஓர் இயக்கத்தின் மூலமாகத்தான் தங்களுடைய இலட்சியத்தை, கடமையை வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள்.

அந்த வகையில் இன்றைய தினம் கலைஞருடைய ஆற்றலுக்கு வெற்றி தேடித் தருகிற இயக்கமாகத் தி.மு.கழகம் அமைந்திருக்கிறது.

**– இனமானப் பேராசிரியர்**